# *2017 மார்கழி மாத சங்கம குடும்பதின நற்செய்தி*

01. புபுது கீதாஞ்சலி பாடல் சிலவற்றை பாடி சூழலை ஆயத்தஞ்செய்வோம்.
    பாடல் இல 174, 178, 183, 184

02. ஆரம்பப் புகழ்ச்சி புபுது பாடல் இல 03 “ஆ வந்திடுவீர்…”

    புகழ்ச்சிக்கு உட்புகுதல்
    கடவுள் தமது திருவுளத்தின் திட்டத்தின் படி அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன் குறிக்கப்பட்டு கிறிஸ்து வழியால் அவரது உரிமைபேற்றுக்கு உரியவரானோம். இவ்வாறு கிறிஸ்துவின் மேல் முதலில் நம்பிக்கை வைத்த நாங்கள் கடவுளுடைய மாட்சியை புகழ்ந்து பாட வேண்டுமென அவர் விரும்பினார். (எபேசியர் 1:11-12)

    உங்களை/என்னை தெரிந்துகொண்டு, அழைத்து கொண்டு வேறாக்கி எமக்கு காட்டியுள்ள விசேடமான அன்பை முன்கொண்டும், எம்மைப் பற்றிய கடவுளின் திருவுளத்தை எம்முள் நிறைவேற்றியதை முன்கொண்டும் இன்று நாம் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

03. புகழ்ச்சியில் நாம் அனுபவித்த உயிர்த்த இயேசுவைப் பற்றிய அனுபவங்களை சிறு குழுவினுள் பகிர்ந்து கொள்ளவும்.

04. நாளுக்குரிய நற்செய்தி

    A. திருவருகை காலம் என்பதன் அர்த்தம் என்ன?
       அதற்குள்ள பெறுமதி என்ன ?
       (அருகில் இருக்கும் சிலருடன் பகிர்ந்துகொள்ளவும்)

    B. பொதுவில் பகிர்ந்துகொள்ளவும

    C. திருவருகை காலம் என்பதன் அர்த்தம் வருதல் என்பதாகும்.
       - எமது பரிசுத்த திருச்சபை தாயானவர் ‘வழிபாட்டு’ வருடத்தின் விசேடமான திருவிழா காலங்களுக்கு முன், அதற்கான முன் ஆயத்தம் செய்யும் காலத்தை ஒதுக்கியுள்ளது. இயேசு ஆண்டவரின் சிலுவை, மரணம், மற்றும் உயிர்ப்பை ஞாபகப்படுத்தும் பாஸ்குத் திருவிழாவிற்கு முன் 40 நாட்கள் ஆயத்தமாகும் காலமாக தவக்காலம் அல்லது கொரோஸ்மா காலம் எனப்படும். அதேபோல கிறிஸ்துவின் பிறப்பு அல்லது நத்தார் திருவிழாவிற்கு முன் 4 வாரங்களை திருவருகை காலம் என்று கூறுகிறோம். இப்படியாக விசேடமான காலத்தை ஒதுக்கி திருச்சபை தாயானவர் எதிர்ப்பார்ப்பது ஆழமானதொரு ஆயத்தத்தோடு அந்த திருவிழாக்களுக்கு உட்புகுவதேயாகும்.

- கத்தோலிக்க வழிபாட்டு வருடத்தின் ஆரம்பம் திருவருகை (ஆகமன) காலத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து கிறிஸ்து அரசரின் திருவிழாவோடு முற்றுப் பெறும்.

  - கிறிஸ்து ஆண்டவரின் ஆகமனத்திற்கு அதாவது வருகைக்கு ஆயத்தமாகும் 4 வாரங்களுக்கு நாம் வந்துள்ளோம். அது மூன்று விதமான வருகையை நினைவூட்டுகின்றது.

i. கிறிஸ்து ஆண்டவர் சிறு குழந்தையாக உலகிற்கு வருதல் மற்றும் முதலாவது நத்தால் (பெத்லகேம் கிறிஸ்து பிறப்பு) (புனித லூக்கா 2:1-7)

ii. அவர் மகிமை அலங்காரத்தோடு இரண்டாவது முறை வருகை அதாவது கடைசி நாளில் சகல மக்களிற்கும் நீதித் தீர்ப்பளிக்க மற்றும் புதிய வானம் புதிய பூமி உதயமாகும் அகிலத்தின் மகா நத்தார். (புனித மாற்கு 13:13-33)
கிறிஸ்து ஆண்டவரின் மகிமை அலங்காரமான இரண்டாவது வருகைக்காக கிறிஸ்தவர்களின் அவதானத்தை ஊக்குவிக்கும் இக்காலத்தில் யாரும் அறியாத தருணத்தில் வருகை தரும் கிறிஸ்து ஆண்டவரை வரவேற்பதற்கு நாம் விழிப்போடு, ஆயத்தத்தோடு இருக்க வேண்டுமென்று நினைவூட்டுகின்றது.

iii. எக்கணமும் எம் மத்திக்கு வருகை தரும் உயிர்த்த இயேசுவின் வருகை, திவ்விய நற்கருணையின் வழி, ஒற்றுமை, ஒருமனப்படுதல் ஊடாக இறைவனை சந்தித்தல் மூலமாக நாளாந்த வாழ்க்கை நிகழ்வுகளினூடாக சந்திக்கும் உயிர்த்த ஆண்டவரை அனுபவிப்பது. கிறிஸ்து இயேசுவின் வருகை புதிய பிறப்புக்கு ஆரம்பமாகும். எந்நேரமும் அவரை சந்திக்கும் ஒருவருக்கு புதியதொரு பிறப்பை அனுபவிக்கலாம். நத்தார் என்ற வார்த்தையின் அர்த்தம் 'பிறப்பு' என்பதாகும். புதியதொரு பிறப்பை பெறாத நத்தார் பாரம்பரிய ஒரு நிகழ்வை நினைவூட்டும் விழாவாகவே இருக்கும். உண்மையான நத்தார் பழையதொன்றல்ல. பழைய வாழ்வை கைவிட்டு புதியதொரு வாழ்வைப் பெறும் எல்லா கணங்களும் நத்தாராகும்.

D. உங்களது வாழ்க்கையில் புதியதொரு பிறப்பை அனுபவித்த அனுபவமொன்றை சிறு மந்தையினுள் பகிர்ந்து கொள்ளவும்.

E. புனித லூக்கா 1: 8-20 புனித லூக்கா 4: 16-19 வாசிக்கவும்
நத்தார் யாருடையது? யாருக்காக? பகிர்ந்து கொள்ளவும்.

நத்தார் விழாவாகும். அது எம்மோடு தங்கியிருக்கும் இறைவனை சந்தித்து அனுபவித்து புதியதொரு பிறப்பை அனுபவிக்கும் மகிழ்ச்சியை அனுபவிக்கும் உற்சவமாகும். ஆனால் தற்போதைய சமூகத்தில் நத்தார் வியாபாரிகளின் ஆளுமைக்கு உட்படுத்தும் அடிமை தனத்திற்கு, வீன்விரயமாக்கும் தன்மைக்கு, ஆறதலற்ற நிலைக்கு, வெளிவேடங்களுக்கு, உட்படுத்தும் உற்சவமாக்கப்பட்டுள்ளது. உண்மையான நத்தார் அடிமைதனத்திலிருந்து பாவத்திலிருந்து நாம் விடுதலையாகுமிடமாகும். இந்த நத்தாரில் நாம் விழிப்புறுவோம்.

- இந்த நத்தாரில் வியயாபாரிகளின் கண்ணிகளிலிருந்து விடுபடுவோம்.
- வேளி வேடங்கள், நாம் ஆயத்தமாகும் விதவிதமான அலங்காரங்கள், உண்மையாகவே கடவுளின் விருப்பமா என்று வினவுவோம்.
- புபுது மக்களாகிய எமக்கு கிடைத்திருக்கும் பெறுமதியை மதிப்போம்.

❖ திவ்வியபலிப் பூசைக்கு வெள்ளை ஆடை அணிதல்
❖ எம்மிடம் இருப்பதில் சொற்பத்தை ஏழைகளோடு பகிர்ந்து கொள்வோம்.
❖ ஆநாதரவான நோயாளிகளை, வயதானவர்களை, சந்தித்து அவர்களுக்கு உதவுவோம்.
❖ பட்டாசுகளை கொளுத்தாமல் இருப்போம்.
❖ கிறிஸ்து ஆண்டவர் இவ்வுலகிற்கு கொணடு வந்த (விடுதலையின்) நற்செய்தியை, நாம் எடுத்துச் செல்ல வேண்டிய, சாட்சி பகர வேண்டியதெப்படி என்பதை (சிந்திப்போம்)
❖ சீடத்துவ சங்கமமாக எமக்குச் செய்ய முடியுமானது பற்றி விழிப்புறுவோம்.

05. அதற்காக பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை வேண்டி இறுதிச் செபத்திற்கு உள்ளாகுவோம்.